நகல்

சிவமயம்.

பிரசோற்பத்தி௵ ௴ 22
(ஆகஸ்டு 31)

ஸ்ரீ சுவாமி விண்ணப்பம். உபயகுசல் மாகுக. தற்போது தங்களுடைமைச் சரீராரோக்கியமாய் இருக்குமென்று நினைக்கிறேன். நெடுநாளாக விவரந் தெரிய வில்லையே யென்றின்றெழுதத் தொடங்கினேன். பனசை ஸ்ரீ மடாதிபதிகள் சொக்கநாதர் கோவையைப் படித்துப் பார்த்ததாக யாதொன்று மெழுதவில்லை. இருபூஜைத் தினத்திற் குழீஇய தங்கள் முதலிய வித்வான்கள் முன்னிலையிற் படித்துக் காட்டவுமில்லையென்று கேள்விப் பட்டேனப்போது சமயமில்லாமற் போனாலும் அது முதலிதுகாறுமா வதமைய மில்லாமற் போகுமா. அக்கோவை சிரமப்பட்டுப் பாடிய பல நயங்களையுங் கருத்தா அறியாமற் போனாற் பாடினவர்க்கு மகிழ்ச்சியுண்டாமா? தாங்களாவத்தை யெடுத்துவரச் சொல்லிப் பாராமற் போனது பெருவருத்தந் தந்தது. தென்னாட்டிலுள்ள சிறுபுலவரும் ஒரு துறைக் கோவை யருமை யறிவார். அவர்கட்காவது பயன்படுமாறச்சிடுவித்துப் புத்தக மனுப்பினாற் பாடுவித்தாருக்கும் பெரும்புகழுண்டு. சற்றேறக்குறைய 20 ரூபாய் செலவிட்டால் பாரபுத்தகம் பதிப்பிக்கலாம். இதொரு பெரிய காரியமாகுமோ. எனக்கு ஞாபகத்துக்கு வந்த ஒவ்வொரு பாடலைக் கேட்டாரெல்லாரும் அக்கோவை யச்சாயிற்றாவென்று கேட்கிறார்கள். எனக்கு முதுமை வரவரவுற்றுன்பம் பெருகுகின்றது. எல்லாவற்றிற்கு மொரு நிருபம் கட்டளையிருக. சங்கத்தில் மீட்டுங் நேர்ந்தாலும் தங்களை யிலேசாகத் தரிசிப்பேன். அதற்கு மிடமில்லையே யென் செய்வது.

தங்களாசிய மருமையுமன்பு மறவாத

5-8-31

மு. ரா. அருணாசலக் கவிராயர்
திருப்பரங்குன்றம்.

நகல்

9

3206

மு. ரா. அருணாசலக் கவிராயர்

15/8/31

page. 529 to 531

F 148 – 149 – 150

(53)